[1970 செப்டம்பர் 1

கோவை மாவட்டத்தில் புதுரகப் பருத்தி.

* 172 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் இந்த ஆண்டு "சுஜாதா" என்ற புதுரகப் பருத்தி பயிரிடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில் எத்தனை ஏக்கர்?

(உ) விளைந்த பருத்தி ஏக்கர் ஒன்றுக்கு எத்தனை கிலோ கிடைத்தது?

(எ) பருத்தியின் தரம் எப்படி இருந்தது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம், 1969-ம் ஆண்டில்.

(இ) தேசீய விதைக் கார்ப்பரேஷனால் விதை உற்பத்தித் திட்டத்தின் கீழ் 1969–70-ம் ஆண்டில் சுமார் 25 ஏக்கர் நிலத்தில் சுஜாதா ரகப் பருத்தி பயிரிடப்பட்டது.

(உ) ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 700 முதல் 1,000 கிலோ வரை பருத்தி மகசூல் செய்யப்பட்டது.

(எ) பருத்தியின் தரம் சிறப்பாக இருந்தது. 100 எண் வரை நூற்கும் நூற்புத்திறன் பெற்றிருந்தது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பருத்தியை நானே கோவை சென்றிருந்தபோது பார்த்தேன். இது உயர்தரப் பருத்தியாக, நீண்ட இழை தரக்கூடிய பருத்தியாக இருப்பதால் வேறு மாவட்டங்களிலும் இந்த ரகப் பருத்தியைப் பயிரிட அரசாங்கம் முனைந்து செயல்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தற்சமயம் கோவை மாவட்டத்திலுள்ள பண்ணையில் மட்டுந்தான் அதைப் பயிரிடுகின்ற திட்டம் இருக்கிறது. மற்ற மாவட்டங்களில் பரப்பு கின்ற அளவுக்குக் குறிப்பில் விவரங்கள் எதுவும் இல்லை.

திரு. சு. துரைசாமி : தமிழ் நாட்டில் பருத்தி பற்றாக் குறையாக இருக்கிறது. ஆகவே, தேவைப்படுகின்ற பருத்தியை அதிகமாக விளை விக்க இந்த ரகப் பருத்தியைத் தமிழக மாநிலம் முழுவதும் விளை விக்கும் திட்டத்தைச் செயல் படுத்த அரசாங்கம முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பருத்தி சாகுபடி செய்வது இன்று பரவலாக எல்லா மாவட்டங்களிலும் இருக்கிறது. சுஜாதா என்ற உயர் ரகப் பருத்தியைப் பற்றிய கேள்வி இது. இது தற்சமயம் கோவை மாவட்டத்தில் மட்டுந்தான் பயிரிடப்பட்டிருக்கிறது.

திரு. ப. மகாதேவன் : இந்தப் பருத்தி ரகங்களுக்குப் பெயர் கொடுக்கும்போது அநேகமாக பெண்களின் பெயர்களாகவே கொடுப்பதாகத் தெரிகிறது. அமைச்சர் அவர்கள் பெண் இனத்தைச சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால் இந்த மாதிரி பெயர்கள் வைக்கப்படுகின்றனவா?

1970 செப்டம்பர் 1]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: நான் இந்தப் பொறுப்புக்கு வருவதற்கு முன்னாலேயே சுஜாதா, பத்மா, ஜெயா என்றெல்லாம் பெயர்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அப்போதிருந்த அரசு எந்தப் பெண்களின் மீது அன்பு கொண்டு இந்தப் பெயர்களை வைத்தார்கள் என்று தெரியவில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன்: அதனால்தான் இப்போது "கருணா" என்று ஆண்களின் பெயரை வைக்க சர்க்கார் முன்வந்திருக்கிறது போலும்!

Industries in Tamil Nadu

* 173 Q.—Thiru N. S. V. Chithan: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Chief Minister has written to the Centre around November, December, 1969 about the expansion of industries in Tamil Nadu; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: குறிப்பிட்ட நவம்பர்–டிசம்பர் மாதங்களில் மத்திய அரசுக்கு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதவில்லை என்றாலும் அதற்கு முன்னாலோ, பின்னாலோ அது போன்று கடிதம எழுதியிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தக் கேள்வி 'எக்ஸ்பான்ஷன் ஆப் இண்டஸ்ட்ரீஸ்' பற்றி எழுதியிருக்கிறார்களா என்பது. முதலமைச்சர் அவர்கள் பிரதம அமைச்சர் அவர்களுக்கு அடிக்கடி நம்முடைய தொழில் வளர்ச்சியைப் பற்றியும், லைசென்ஸ் அப்ளிகேஷன்ஸ் அங்கே கொடுக்கப்பட்டிருப்பவை அதிகமாக மறுக்கப்படுவதைப் பற்றியும், காலதாமதப் படுத்துவதைப் பற்றியும் எழுதி இருக்கிறார்கள். குறிப்பிட்ட மாதத்தில் சிமெண்ட் விற்பனை இல்லாத காரணத்தால் 'பூல் பிரைஸ்' வேண்டுமென்ற கோரிக்கையை சிமெண்ட் ஆலை அதிபர்கள் கொண்டு வந்ததையொட்டி அது பற்றி எழுதியிருக்கிறார்கள். ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் தொழிற்சாலைக்கு 1963-ம் ஆண்டு கொடுக்கப்பட்ட அனுமதி மறுபடியும் மறுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலையைத் தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி எழுதியிருக்கிறார்கள். கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்றைக் கோவை மாவட்டத்தில் ஏற்படுத்த வேண்டுமென்பது பற்றியும் எழுதியிருக்கிறார்கள்.

Dr. H. V. Hande: While it is laudable that our Hon Minister for Industries is taking a pragmatic view about industrial growth of our State and saying that more wealth should be created and he has also made a similar statement to that effect a few months ago, since a pragmatic view has been taken by this Government, since there is lot of trouble between State and Centre